**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 03.11.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

தொழில்நுட்பப் புரட்சிகளை உருவாக்குவதில் முன்னோடி நாடாக இந்தியா மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுமைப் படைப்புகளுக்கு ஏற்ற சூழல் ஒன்றை உருவாக்கி, இந்தியாவில் ஆராய்ச்சி புரிவதை எளிமையாக்கும் நோக்கத்துடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் கீழ், வீடு, வீடாக சென்று கணக்கெடுக்கும் பணிகள் நாளை தொடங்க உள்ளன.

ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் உலகக் கோப்பையை வென்றுள்ள இந்திய மகளிர் அணிக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**------------------------**

மோடி 1 (8)

தொழில்நுட்பங்களின் நுகர்வு நாடாக இருந்த இந்தியா, தற்போது, தொழில்நுட்பப் புரட்சிகளை உருவாக்குவதில் முன்னோடி நாடாகவும் மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். **புதிய அறிவியல்-தொழில்நுட்பப் புதுமைகள்** குறித்து, புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற மாநாட்டில் அவர் பேசுகையில், உலகிலேயே மிகவும் வெற்றிகரமான டிஜிட்டல் பொது சுகாதாரக் கட்டமைப்பு, இந்தியாவில்தான் இருப்பதாக கூறினார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்…….

**(வாய்ஸ்)**

மோடி 2 (16)

**(வாய்ஸ்)**

புதுமைப் படைப்புகளுக்கு ஏற்ற சூழல் ஒன்றை இந்தியாவில் உருவாக்கி, ஆராய்ச்சி புரிவதை எளிமையாக்கும் நோக்கத்துடன் அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார். **அனுசந்தான்-**தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவப்பட்டதால், இந்தியப் பல்கலைக் கழகங்களில், ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திப் பணிகள் ஊக்கம் பெற்றுள்ளதாகவும், தனியார் துறையிலும்இத்தகைய முயற்சிகளை ஊக்கவிக்க, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். ஆராய்ச்சி, மற்றும், அபிவிருத்திப் பணிகளுக்கான நாட்டின் மொத்தச் செலவினங்கள், கடந்த பத்தாண்டுகளில், 2 மடங்காக உயர்த்தப்பட்டு உள்ளதாகவும், இந்தியாவில் பதிவு செய்யப்படும் காப்புரிமைகளின் எண்ணிக்கை, 17 மடங்கு அதிகரித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவை உலகின் முக்கிய புதுமையாக்கக் கேந்திரமாக மேம்படுத்தும் வகையிலான அரசின் கொள்கைகள், மற்றும், முடிவுகளின் பலன், தற்போது வெளிப்படத் தொடங்கி இருப்பதாக, பிரதமர் கூறினார். குவாண்டம் கணினி, பசுமை ஹைட்ரஜன், ஆழ்கடல் ஆராய்ச்சி போன்ற பல்வேறு புதிய துறைகளில் இந்தியா, கடந்த பத்தாண்டுகளில், முக்கிய

மோடி 3 (9)

**(வாய்ஸ்)**

முன்னேற்றங்களை எட்டி இருப்பதாக அவர் தெரிவித்தார். உலகின் 3ஆவது பெரிய ஸ்டார்ட்-அப் நாடாக இந்தியா திகழ்வதை பிரதமர் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவின் செமி கண்டக்டர் துறையில், பெரிய அளவிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், நாட்டில் சுமார் 6 ஆயிரம் டீப்-டெக் நிறுவனங்கள், தூய எரிசக்தி, அதிநவீன கூட்டுப் பொருட்கள் போன்ற துறைகளில் ஈடுபட்டு உள்ளதாகவும், பிரதமர் தெரிவித்தார். 2014ஆம் ஆண்டில், 10 ஆயிரம் டாலராக இருந்த, இந்திய உயரி தொழில்நுட்பத் துறையின் மதிப்பு, தற்போது, 140 பில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

மோடி 4 (4)

மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர், பேராசிரியர் அஜய் குமார் சூத், நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சர் ஆந்த்ரே கைம் உள்ளிட்டவர்களும், மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

------------------------

முர்மு (13)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று டேராடூனில், உத்தராகண்ட் சட்டமன்றத்தின் சிறப்பு அமர்வில் உரையாற்றினார். கடந்த 25 ஆண்டுகளில், கல்வி, சுகாதாரம், சுற்றுலா, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில், உத்தராகண்ட் மாநிலம் எட்டியுள்ள வளர்ச்சி, பாராட்டத்தக்கது என்று அவர் கூறினார். மகளிர் அதிகாரப் பங்கேற்பிலும், மெச்சத்தக்க சாதனைகளை உத்தராகண்ட் எட்டி இருப்பதாக, அவர் தெரிவித்தார். சமச்சீர் சிவில் சட்டத்தை அமல்படுத்துவதில், உத்தராகண்ட் சட்டமன்றத்தின் முன் முயற்சிகள், மாநிலத்தின் முற்போக்கு பார்வையை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்து இருப்பதாக அவர் பாராட்டினார். இளைஞர்கள், மற்றும், நலிவடைந்த பிரிவினரின் நலன்களையும் மேம்படுத்தத் தேவை இருப்பதால், மக்கள் பிரதிநிதிகள், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு வளர்ச்சி, மற்றும், பொது நலனில், முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என, குடியரசுத் தலைவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

------------------------

*தெலங்கானா விபத்து (12)*

தெலங்கானா மாநிலம், விக்காராபாத் அருகே இன்று காலை, ஜல்லி லாரி அரசுப் பேருந்து மீது மோதி, ஜல்லிக் குவியல் பேருந்து மீது கொட்டி மூடியதால் ஏற்பட்ட விபத்தில், குறைந்தது 19 பேர் உயிரிழந்தனர். ஜேசிபி உதவியுடன், கற் குவியல் அகற்றப்பட்டு, மேலும் 20 பேர் படுகாயம் அடைந்த நிலையில், விக்காராபாத் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். விபத்து குறித்து, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் துயரம் வெளியிட்டுள்ளனர். விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து, தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை அறிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் அறிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

முருகன் (9)

தமிழகத்திற்கு, சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் அவசியம் என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பதிவு பெற்ற வாக்காளர்கள், மற்றும் இறந்து போனவர்களின் பெயர்களை கண்டுபிடித்து நீக்கவும், தொடர்புடைய வேறு சில தகவல்களை புதுப்பிக்கவும், இப்பணிகள்

அவசியம் என்று, அவர் இன்று சென்னையில், செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். திமுக அரசின் நெல் கொள்முதல், மற்றும் வேலை வாய்ப்பு மோசடி குறித்து, சிபிஐ விசாரணை தேவை என்று, அவர் மேலும் வலியுறுத்தினார்.

------------------------

*வாக்காளர் பட்டியல் 1 (17)*

புதுச்சேரியில், சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் கீழ், வீடு, வீடாக சென்று கணக்கெடுக்கும் பணிகள் நாளை தொடங்க உள்ளன. இதற்கான தனி நபர் கணக்கெடுப்பு படிவங்களை அச்சிடும் பணிகள், ஏற்கனவே முடிவடைந்து, வாக்குச் சாவடி நிலை அதிகாரிகள், வாக்காளர் பதிவு அதிகாரிகள், மற்றும், உதவி அதிகாரிகளுக்கு பயிற்சிகளும் வழங்கப் பட்டுள்ளதாக, தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளுக்கு, 2 கட்டங்களாக பயிற்சி அளிக்கப் பட்டதாகவும், இதில், ஒருகட்டப் பயிற்சி, அரசியல் கட்சிகளின் வாக்குச் சாவடி முகவர்களுடன் சேர்த்து நடத்தப் பட்டதாகவும் அவர் கூறினார்.

வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள், டிசம்பர் 4ஆம் தேதி வரை, வீடு, வீடாக சென்று, முன்கூட்டியே நிரப்ப்பட்ட படிவங்களை, ஏற்கனவே உள்ள வாக்காளருக்கு வழங்கி, முழுமையாக நிரப்பப்பட்ட படிவங்களை சேகரிப்பார்கள் என்றும், வீட்டில் இல்லாத வாக்காளர்கள், முகவரி மாறிய வாக்காளர்கள், மற்றும், இறந்து போன வாக்காளர்களை இவர்கள் இனம் கண்டு, விவரங்களை சரிபார்ப்பார்கள் என்றும் திரு. ஜவஹர் தெரிவித்தார். புதிதாக தகுதி பெறும் வாக்காளர்களின் விவரங்களும், சேகரிக்கப்படும் என அவர் கூறினார். அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி ஏஜென்டுகளும்,

*வாக்காளர் பட்டியல் 2 (15)*

தினசரி 50 வரையிலான எண்ணிக்கையில், நிரப்பப்பட்ட படிவங்களை சேகரித்து, வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளிடம் வழங்கலாம் என, அவர் தெரிவித்தார்.

எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுப் போவதை தவிர்க்கும் வகையில், அதிகாரிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்தபட்சம் 3 முறை வருகை தருவார்கள் என்று, தலைமைத் தேர்தல் அதிகாரி கூறினார். தற்போதுள்ள வாக்காளர்கள், முன்கூட்டியே நிரப்பப்பட்ட படிவங்களை பதிவிறக்கம் செய்து கொண்டு, முழுமையாக நிரப்பப்பட்ட படிவங்களை பதிவேற்றம் செய்ய, ஆன்-லைன் வசதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பணிகளை தொடர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 9ஆம் தேதி வெளியிடப்படும் என்றும், 2026 ஜனவரி 8 வரை, கோரிக்கைகள், மற்றும் ஆட்சேபனைகளை தாக்கல் செய்யலாம் என்றும் திரு. ஜவஹர் தெரிவித்தார். கோரிக்கைகள், மற்றும், ஆட்சேபனைகள் மீது ஜனவரி 31ஆம் தேதி வரை விசாரணை நடைபெறும் என்றும், அதை தொடர்ந்து, 2026 பிப்ரவரி 7ஆம் தேதி, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும், அவர் தெரிவித்தார்.

*வாக்காளர் பட்டியல்* 3(4)

புதுச்சேரியில், 24 ஆண்டு இடைவெளிக்கு பின்னர், சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப் படுவதும், கடைசியாக இப்பணிகள், 2002ஆம் ஆண்டு, ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு மேற்கொள்ளப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*ஜிஎஸ்டி-தெலங்கானா 1* (6)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், தெலங்கானாவில், பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி – தெலங்கானா 2* (16)

**(வாய்ஸ்)**

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், தெலங்கானாவில், மாநிலத்தின் வளர்ச்சி வேகத்தை கணிசமாக ஊக்குவித்து வருகின்றன. மருந்து உற்பத்தித் துறையில், 30 புற்றுநோய் மருந்துகள் மீதான ஜிஎஸ்டி பூஜ்யமாகவும், தனிநபர் பயன்பாட்டிற்கான பல்வேறு மருந்துகள் மீதான ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாகவும் குறைக்கப் பட்டுள்ளதால், மக்கள் அனைவருக்கும் மருத்துவ செலவு குறைந்துள்ளது. ஆளில்லாத குட்டி விமானங்கள், பீரங்கிகள், மற்றும் கவச வண்டிகள் மீதான ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், பாதுகாப்பு உற்பத்தித் துறை, ஊக்கம் பெற்றுள்ளது. வேளாண்மை, சுரங்கம், மற்றும், உள்கட்டமைப்புத் துறைகளிலும், ட்ரோன்களின் பயன்பாடு அதிகரித்து இருப்பதால், பாதுகாப்பு உற்பத்தித் துறையில், தேவை அதிகரித்துள்ளது. இதனால், இத்துறையில், ஆராய்ச்சி, மற்றும், அபிவிருத்திப் பணிகளும்

தீவிரமடையும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது. பொம்மைகள் மற்றும் கைவினைத் துறைக்கான வரிக் குறைப்பினால், தெலங்கானா மாநிலத்தின் புகழ்பெற்ற நிர்மல் பொம்மைகள், பெம்பர்த்தி உலோக கலைப் பொருட்கள், அடிலாபாத் வார்ப்புச் சிலைகள், மற்றும், வாரங்கல் தரை

*ஜிஎஸ்டி-தெலங்கானா* 3 (4)

விரிப்புகளின் விலை குறைந்து, கைவினைக் கலைஞர்களின் வருமானமும், ஏற்றுமதி வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. இவ்வாறாக, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி வரிக் குறைப்பினால், தெலங்கானாவில், பல்வேறு துறைகள் வலுவடைந்து வருவதை, தெளிவாகவே காண முடிகிறது.

------------------------

*கைலாஷ்நாதன்* (6)

புதுச்சேரியில், ஆறுபடை வீடு மருத்துவக் கல்லூரி, மற்றும், தமிழ்நாடு சேவா பாரதி சார்பில், நடமாடும் இலவச மருத்துவப் பிரிவை, துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். ராஷ்ட்ரிய சேவா பாரதி ஒருங்கிணைப்புச் செயலர் திரு. சுதிர்குமார், வினாயகா மிஷன் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

------------------------

*கிரிக்கெட்-ரங்கசாமி* (9)

ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் உலகக் கோப்பையை வென்றுள்ள இந்திய மகளிர் அணிக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். உழைப்பு, அர்ப்பணிப்பு, ஒற்றுமை, மற்றும், விடா முயற்சி மூலம், இந்தியாவின் திறமைகளையும், வலுவையும்,உலகிற்கு வெளிப்படுத்தி உள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணியினரால், நாம் அனைவருக்குமே பெருமை என்று, அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். இந்த வெற்றியினால், இந்தியப் பெண்கள் அனைவருமே, புதிய நம்பிக்கை, மற்றும், ஊக்கம் பெறுவார்கள் என்றும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

------------------------

*வானிலை* (8)

வங்கக் கடலில் இன்று, மியான்மரை ஒட்டி நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில், வடக்கு-வடமேற்கு திசையில், மியான்மர்

பங்களாதேஷ் கரையை ஒட்டி நகரக் கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 9ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

------------------------

*ஜிப்மர்* (4)

வரும் 5ஆம் தேதி புதன் கிழமை, குருநானக் பிறந்த நாளை ஒட்டி, புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில், புறநோயாளிகள் பிரிவு இயங்காது என, ஜிப்மர் நிர்வாகம் அறிவித்துள்ளது. அவசரப் பிரிவு சேவைகள், வழக்கம்போல் செயல்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

*அமைதி நாள்* (10)

1918ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் தேதி எட்டப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டினால், முதலாம் உலகப் போர் முடிவிற்கு வந்ததை குறிக்கும் வகையில், ஆண்டுதோறும் நவம்பர் 11ஆம் தேதி, உலக அமைதி தினமாக கடைபிடிக்கப் படுவதை ஒட்டி, புதுச்சேரியில் வரும் 11ஆம் தேதி நடைபெற உள்ள உலக அமைதி தின விழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்க உள்ளனர். உலக சமாதான தூதுவர் குரு மகான், இன்று, புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். திருவாங்கூர் இளவரசர் அவிட்டம் திருநாள் வர்மா தம்புரான், மற்றும், ஆன்மீகத் தலைவர்களும், நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளதாக அவர் கூறினார்.

------------------------

தொழில்நுட்பப் புரட்சிகளை உருவாக்குவதில் முன்னோடி நாடாக இந்தியா மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுமைப் படைப்புகளுக்கு ஏற்ற சூழல் ஒன்றை உருவாக்கி, இந்தியாவில் ஆராய்ச்சி புரிவதை எளிமையாக்கும் நோக்கத்துடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின் கீழ், வீடு, வீடாக சென்று கணக்கெடுக்கும் பணிகள் நாளை தொடங்க உள்ளன.

ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் உலகக் கோப்பையை வென்றுள்ள இந்திய மகளிர் அணிக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**